பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:- எட்டு | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி30 | ஞாயிற்றுக்கிழமை (15.09.2002) | தொலைபேசி 3378 | ஒலி 270




## அரசு- விடுதலைப்புலிகள் இருதரப்பிற்கும்
## சர்வதேச அழுத்தம்- நிதிநெருக்கடி
# மீண்டுமோர் யுத்தம் என்ற
# பேச்சிற்கே இனி இடமில்லை

### தியாகி திலீபனின் எழுச்சி நிகழ்வு



(யாழபபாணம்)
தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி தியாக தீபம் லெப் கேணல் திலீபனின் 15ம் ஆண்டு
(08ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கான தூதுவர் மங்கள கருத்து

(புதுடில்லி)

**இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மீண்டும் ஒரு யுத்த முனைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலைக்கு சர்வதேச நாடுகளின் நெருக்கடிகளும் இரு சாராருக்கும் எற்பட்டுள்ள நிதி நெருக்கடியுமே முக்கிய காரணமாக உள்ளது என்று இந்தியா விற்கான இலங்கை தூதுவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே நாளை தாய்லாந்தில் இடம்பெறவுள்ள நேரடிப்பேச்சுவார்த்தை தொடர்பாக இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மங்களமுனசிங்கா "ஏசியன் நியூஸ்" சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாளை தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தை
(08ம் பக்கம் பார்க்க)

### நாளை சமாதானப் பேச்சு
## அரசு- புலி பிரதிநிதிகள் தாய்லாந்து சென்றனர்

(பாங்கொக்)

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே நாளை தாய்லாந்தில் நடைபெறவுள்ள முதற்கட்ட நேரடிப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச பிரநிதிகள் பேச்சுவார்த்தை நடைபெறும் சட்டாஹில் கடற்படைத் தளத்தை நேற்று மாலை சென்றடைந்தனர்.

இதேவேளை இப்பேச்சுவார்த்தை
(08ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் ஆலோசகருடன் ஜோய் மகேஸ்வரன் சந்திப்பு

## இலங்கையில் சமாதானம் ஏற்பட
## இன்னமும் சில ஆண்டுகள் எடுக்கும்

கான இலங்கைத் தூதுவர் மங்களமுன ... தெரிவித்திருப்பதாவது:

# பிரதமரின் ஆலோசகருடன் ஜோய் மகேஸ்வரன் சந்திப்பு

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும், தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு நிபுணரும், தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் சார்பில் கலந்து கொள்ளபவருமான ஜோய் மகேஸ்வரனும் நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

கொழும்பில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவி ருத்தி வேலைகள் தொடர்பாக இரு வரும் கலந்துரையாடியதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை தாய்லாந்துப் பேச் சுவார்த்தையில் அரசுப் பிரதிநிதிகளா கக் கலந்து கொள்ளும் அமைச்சர் கள் எவரையும் ஜோய் மகேஸ் வரன் சந்திக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

இலங்கையில் சமாதானம் ஏற்பட

# இன்னமும் சில ஆண்டுகள் எடுக்கும் நோர்வே பிரதி அமைச்சர் கருத்து

(கொழும்பு)
இலங்கையில் சமாதானம் மலர வதற்கு இன்னும் சில ஆண்டுகள் பிடிக்கும் என நோர்வேப் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல கீசன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடு தலைப்புலிகளிற்கும் இடையில் தாய் லாந்தில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தை யில் கலந்து கொள்ளும் பொருட்டு ஐந்து பேர் கொண்ட குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்லும் ஹெல கீசன் நோர்வேயில் இருந்து தாய் லாந்திற்குப் புறப்படுவதற்கு முன் னரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப்பேச்சுவார்த்தையின் போது பல்வேறு முட்டுக்கட்டைகளை இரு தரப்பினரும் எதிர்நோக்க வேண் டிவரும். இதனால் பேச்சவார்த்தை மூலமான தீர்வில் காலதாமதங்கள் ஏற்படக்கூடும்.

(08ம் பக்கம் பார்க்க)



# யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மகேஸ்வரன் - சங்கரி தலைமையில் நடந்தது

## டக்ளஸ்- மதனராஜா ஆகியோரின் முன்மொழிவுகள் அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற் றுப் பிற்பகல் 2மணிக்கு யாழ் அரச செயலகத்தில் யாழ் மாவட்ட அபி விருத்திக் குழு மற்றும் ஒருங்கி ணைப்புக்குழுவின் இணைத் தலைவ ரான தி.மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரி ஆகி யோரின் தலைமையில் நடைபெற் றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி என்.ரவிராஜ், ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் யாழ் பதில் அரசாங்க அதிபர் பி.பத்தினி யம்மா, கிளிநொச்சி மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளரான எஸ்.மகாலிங் கம், கே.குணபாலசிங்கம், விடுத லைப்புலிகளின் யாழ் மாவட்ட நிர் வாகத்துறையைச் சேர்ந்த எஸ்.விஜி தரன், பி.இளஞ்சேரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(08ம் பக்கம் பார்க்க)

# நல்லூர் மாணவன் கடத்தப்பட்ட செய்தி வெறும் புரளி

(ஈச்சமோட்டை)
ஹயஸ் வானில் கடத்தப்பட்ட தாகக் கூறப்பட்ட பரியோவான் கல் லூரி மாணவன் நேற்று வீடு வந்து சேர்ந்துள்ளார். மாணவன் கடத்தப் பட்டதாக வெளியான செய்தியிலும் எந்தவித உண்மையும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

நல்லூரைச் சேர்ந்த தரம் 10ல் கல்வி பயிலும் பிரஸ்தாப மாணவன் கடந்த திங்களன்று கல்லூரியில் நடைபெறும் பரீட்சை ஒன்றுக்காக பெற்றோரிடம் ஆயிரம் ரூபா பணத் தைச் பெற்றுச் சென்றுள்ளார். பின் னர் மீதிப்பணத்தில் பெற்றோருக்குத் தெரியாமல் கொழும்பு செல்லும் எண்ணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஹயஸ் வான் ஒன்றில் புறப் பட்டுள்ளார்.

இதற்கிடையில் வன்னிப்பகுதியில் உறவினர் ஒருவரைச் சந்தித்த மாண வன் கொழும்புப் பயணத்திற்கென 240 ரூபாவை வாங்கியுள்ளார். அங் கிருந்து கொழும்பு சென்ற மாணவன் தான் ஹயஸ் வான் ஒன்றில் வந்

(08ம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி- ஈ.பி.ஆர்.எல்.எவ்- புளொட்- ஈரோஸ் நான்கு கட்சிகள் நேற்றுக் கூட்டாகச் சந்திப்பு

## நிரந்தரத் தீர்வைக் காணுமாறு வலியுறுத்து

(கொழும்பு)
இலங்கையின் தற்போதைய சமாதானச் சூழலை எவரும் குழப் பியடிக்க இடம் கொடுக்கக் கூடா தென்று ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி, ஈரோஸ், புளொட் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளன. மேற்படி நான்கு கட்சிக ளும் நேற்று கொழும்பில் கூடி தற் போதைய சமாதான முயற்சிகள் குறித்து விரிவாகக் கலந்துரையா டினர்.

இக் கலந்துரையாடலில் ஈ.பி.டி பியின் செயலாளர் நாயகமும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா ஈ. பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் அரசியல் பிரமுகர் த.சுபத்திரன் ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தர் சங்கர் ராஜீ, புளொட் அமைப்பின் தலைவரும் எம்.பியுமான த.சித்தார்த் தன் ஆகியோரும் கலந்து கொண் டனர். தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் வெற்றிகர மாக முன்னேறிச் செல்வதற்கும் அதனைப் பலப்படுத்துவதற்கும் தமது பங்களிப்புப் பற்றியும் அதனை எந்த வகையில் மேற்கொள்வது என்பது குறித்தும் விரிவாக கலந்து

(08ம் பக்கம் பார்க்க)

## கால் நூற்றாண்டு இடைவெளியின் பின் யாழ்.பல்கலையில் மூவினத்தவரும்

# இணைந்து கற்பதற்கு அனுமதி

(கொழும்பு)

கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி சுமார் 25 வருடகால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சிங்கள மாணவர்களும் அனுமதிக்கப்படவிருக்கின்றனர். சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் 25 பேர் இவ்வாறு அனுமதிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஆண்டின்பழையபாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இஸட்-ஸ்கோர் முறை பின்பற்றப்படாதவிதத்தில் மேலதிகமாக 222 மாணவர்களை பல்கலைகழகங்களுக்கு அனுமதிப்பதென்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் மருத்துவப் பிரிவுக்கு 47, பல் வைத்தியம் 14, விலங்கு மருத்துவம் 24, விவசாயம் 69, உணவும் ஊட்டமும் 5, உயிரியல் விஞ்ஞானம் 45, கணனிவிஞ்ஞானம் 3, தகவல் தொழில் நுட்பம் 6, கலைப்பிரிவு 4, அளவுமதிப்புரு மதிப்பீடு (Quantity Surveying) 5 என்ற அளவில் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இஸட்-ஸ்கோர் முறையிலுள்ள முறைப்பாடு காரணமாக தமக்கு மருத்துவத் துறைக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறி சுமார் 50 மாணவர்கள் கடந்த மாதம் சத்தியாக்கிரக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அகில இலங்கை ரீதியாக ஆசிரியர்கள் மட்டத்தில் விளையாட்டுப் போட்டி

(கொழும்பு)

அரசாங்கப்பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்று கல்வி, மனிதவள அமைச்சினால் நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11,12 ஆம் திகதிகளில் பதுளை வின்சன்டயஸ் விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

அகில இலங்கைரீதியில் நடத்தப்படவுள்ள இப்போட்டி 40வயதிற்குமேற்பட்டவர்கள், 40 வயதிற்கு உட்பட்டவர்கள் என இருபிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தாம் சேவையாற்றும்வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக உடனடியாக கல்வி, கலாசாரமனிதவளஅபிவிருத்திஅமைச்சுக்குவிண்ணப்பங்களை அனுப்பும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சமாதானப் பேச்சு வெற்றிபெறவேண்டி இன்று திருமுறை ஓதல்

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பமாகவுள்ளசமாதானப் பேச்சுக்கள் சிறந்த முறையில் நடைபெற்றுசுமுகமான தீர்வு ஏற்படவேண்டி இன்று காலை 7.00மணிமுதல்அராலிதெற்கு அகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் திருமுறை ஓதப்படவுள்ளது.

இந்நிகழ்வில் ஓதுவார்மூர்த்திகளையும் சமயப் பெரியார்களையும் மற்றும் பொதுமக்களையும் கலந்துகொண்டு சமாதானம், அமைதிவேண்டி இறைவனைப் பிரார்த்திக்குமாறு ஆலய அறநெறிப்பாடசாலை இந்துமாமன்றம் கேட்டுள்ளது. (உ)

## மீளக் குடியமர்ந்தோருக்கு வீட்டு பாவனை பொருட்கள்

(தென்மராட்சி)

வன்னியில் இருந்து காரைநகர் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 458 குடும்பங்களுக்கு யு என். எச் சீ. ஆர் நிறுவனம் வீட்டுப்பாவனைப் பொருட்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதேவேளை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை வன்னியில் இருந்து மீளக் குடியமர்ந்துள்ள 147 குடும்பங்களுக்கு தமது சொந்தநிதியில் இருந்து வீட்டுப் பாவனைப் பொருட்களை அண்மையில் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## பலத்த பாதுகாப்பு மத்தியில் ஜம்முகாஷ்மீரில் நாளை தேர்தல் ஆரம்பம்

(புதுடில்லி)

இந்தியாவின் சர்ச்சைக்குரிய மாநிலமான காஷ்மீரில் நாளை தேர்தல்கள் ஆரம்பமாகவுள்ளன 56 இலட்சம் பேர் இத் தேர்தலில் வாக்களிக்கக் கூடிய தகுதியை பெற்றுள்ளனர்.

அடுத்தமாதம் வரை நடைபெறவிருக்கும் இத்தேர்தல் முதற்கட்டமாக 26 சட்ட மன்றத் தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதனால் அங்கு பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட தேர்தல் ஸ்ரீநகரில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் எனவும் 3,4 ஆம் கட்டத்தேர்தல்கள் அடுத்தமாதம் 5,8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)


## திருமுறை ஓதல்

இடம்: அராலி தெற்கு அகாயகுளம் விநாயகர் தேவஸ்தானம்
காலம்: 15 - 09 - 2002 ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம்

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப்பேச்சுக்கள சிறந்த முறையில் நடைபெற்று சுமூகமான தீர்வு ஏற்படவேண்டி திருமுறை ஓதல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓதுவார் மூர்த்திகளும் சமயப் பெரியார்களும, மக்களும் கலந்து சமாதான அமைதிக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு:- உரிமையாளர்
சச்சியா இரும்பகம்
வட்டுக்கோட்டை
(C/5004)


## தியாக தீபம் திலீபன் அண்ணா

வல்லபுலி வீரனாம் அண்ணன் பிரபா வழிதனில்
வண்ண நிலவாய் வையகம் தனிலே புலிவீரன்
என்ற நாமம்
கொண்டு எம்முன்தானே அண்ணன் திலீபன் புதுவீரனாக
எல்லைதாண்டிய ஏகாதிபத்தியத்தின் கொடுமைதனைப்
போக்க எண்ணி அகிம்சை வழிதனிலே போராடிய
வீரமறவன்
தேரோடும் நல்லூர் வீதியிலே ஐந்தம்சக்கோரிக்கையை
முன்வைத்து உண்ணா நோன்புதான் இருந்தான்
நாவரண்டு
நாவரண்டு நல்லூர் வீதியிலே பூசுருண்ட மாதிரியாய்ப்
போய்முடிந்தான்

எம் அண்ணன் திலீபன் பன்னிரு நாட்கள் ஆகாரம் ஏதும் இன்றி தன்னுயிரை இம் மண்ணுக்காய் ஈர்ந்தான். அண்ணா திலீபனே ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆறிடுமா எம் துயரம்.

### வீரமறவனே அண்ணா திலீபா!

உன்னை இழந்த எம் மக்கள் படும் வேதனைதான்
எத்தனை
எத்தனை அண்ணாவே நீ மடியவில்லை வானத்து
விண்ணோய்
பிரகாசித்துக்கொண்டிருக்கிறாய் உன் நினைவுடன்
என்றும் நாம் இருப்போம் தித்திக்கும் கவிபாடி
தீஞ்சுவையின்
கடலாடி எத்திக்கும் உன்னைப் போற்றி வணங்குவோம்

க. குமரன் விசுவமடு

## தனித்தியங்குகிறது

(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை உபதபாலகம் தனியாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இடப்பெயர்வுகள் காரணமாக சாவகச்சேரி தபாலகத்துடன் இணைந்து மேற்படி உபதபாலகம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## யாழ். கல்வியற் கல்லூரியில் இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி விளையாட்டு அவை நடாத்தும் மென்பந்துத் துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு,

**துடுப்பாட்டம்**

மு.ப 8 30 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரி வி கழகத்தை எதிர்த்து வலயம் I வி. கழகம் மு.ப 10.00 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலை வி. கழகம் எதிர் பலாலி ஆசிரியர் கலாசாலை வி. கழகம், பி.ப 4.00 மணிக்கு யாழ் தேசிய சேமிப்புவங்கி வி. கழகம் எதிர் தொழில்நுட்பப்பூங்கா வி. கழகம்.

**கரப்பந்தாட்டம்**

பி.ப 3.00 மணிக்கு யாழ் போதனாவைத்தியசாலைவி. கழகம்எதிர்பலாலி ஆசிரியர் கலாசாலை வி. கழகம்.

பி.ப 4 00 மணிக்கு மதுவரித் திணைக்கள வி. கழகம் எதிர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை வி. கழகம்

**கால்பந்தாட்டம்**

மு.ப 8.30 மணிக்கு மதுவரித்திணைக்கள வி,கழகம் எதிர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை

மு ப. 9 30 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரி வி. கழகம் எதிர் வலிகாமம் கல்விவலய வி.கழகம்

பி.ப 3.30 மணிக்குபலாலி ஆசிரியர் கலாசாலை வி. கழகம் எதிர் யாழ் தபால் அலுவலக வி.கழகம்

பி.ப 4.30 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலை வி.கழகம் எதிர் வலயம் I விளையாட்டுக் கழகம். (இ-5)

### சமாதானம் வேண்டி திருமுறை ஓதல்

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் சிறந்த முறையில் நடைபெற்று சுமுகமானதீர்வு ஏற்பட வேண்டி அராலி தெற்கு அகாய குளம் விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று காலை 7 மணி தொடக்கம் திருமுறை ஓதல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஓதுவார் மூர்த்திகள் சமயப் பெரியார்கள் மற்றும் மக்கள் கலந்து சமாதான அமைதிக்காகஇறைவனை பிரார்த்திக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கருத்துரையும் காட்சியும் நிகழ்வு இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினதும் திரைப்பட வட்டத்தினதும் ஏற்பாட்டில் 'கருத்துரையும் காட்சிகளும்' எனும் நிகழ்வு இன்று மு. ப. 9.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரித் தொடர்பியல்துறைப் பேராசிரியர் வே. அலெக்ஸ் மற்றும் திரைப்பட இயக்குனரும் கதாசிரியருமான அருள்மொழி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் அருண்மொழியின் வீட்டுக்கு விடுதலையாகி, பச்சை மண்ணு, நில மோசடி, தோழி ஆகிய 20 நிமிட குறுந்திரைப்படங்களும் லெனின் நாக் அவுட் குற்றவாளிகள் ஆகிய குறுந் திரைப்படங்களும் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் இந்நிகழ்வுக்கு வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-5)

## இராசி பலன்

15-09-2002
(ஆவணி 30 ஞாயிறு)
நவமி பி.ப 3 38 வரை
மூலம் மு.ப 10 42 வரை
இராகு காலம் 4 33-6 03
நல்லநேரம் 9.03-10 33
அமிர்த சித்தம
ஆவணி ஞாயிறு

**மேடம்**
உடல் சோர்வு, புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், பயணம்.

**இடபம்**
பிரயாண பயம், எதிர்பாராத மனஸ்தாபம், காரிய தடங்கல், உடல்வியாதி.

**மிதுனம்**
நல்ல வரவேற்பு, குடும்ப சுகம், பொருள் சேர்க்கை, தெய்வ சிந்தை.

**கடகம்**
காரிய சித்தி, செய்தொழில் விருத்தி, சுவாரஸ்யம், உடல் நலம்.

**சிங்கம்**
செல்வாக்குக் குறைவு, சிறு வியாதி, முயற்சி தாமதம், குடும்பக்கவலை.

**கன்னி**
குடும்ப சுகம், மனச் சோர்வு. முயற்சி கைகூடும், தாய்வழி உறவு.

**துலாம்**
அன்னியர் சந்திப்பு, சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
மாதர் நட்பு, நிலை மாற்றம், முயற்சி தாமதம், தனவிரயம்.

**தனுசு**
பெரியோர் ஆதரவு, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், சயன சுகம்.

**மகரம்**
தேவையற்ற மனஸ்தாபம், காரிய அலைச்சல், சுப செலவு, சயனசுகக்குறைவு.

**கும்பம்**
நினைத்தகாரியம் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி, கௌரவம், தனவரவு.

**மீனம்**
தூரதேசச்செய்தி, பிறர் உதவி, முயற்சி கைகூடும், தொழில் சிந்தனை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

நேரடியாக நிதியுதவியைப் பெறும் நோக்கில்

# ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் பிரட்மன் கலந்து கொள்வார்

(கொழும்பு)

இலங்கையின்மீள் குடியேற்றம், புனர்வாழ்வுபுனரமப்பு நடவடிக்கைகளுக்கென நேரடியாக நிதியுதவிய பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாட்டில் பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டிற்கு பிரதமரின் செயலர் உட்பட, புனர்வாழ்வு அகதிகள் மீள்டிகுயேற்ற அமைச்சின் செயாலளர் கே. ஜெயரட்ணம், நிதியமைச்சின் அதிகாரிகள் சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இலங்கையிலுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு புனர்வாழ்வு, மீள்குடி யேற்ற நடவடிக்கைகளுக்கு என ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய 3.9மில்லியன் யூரோக்கள் தொடர்பாக புனர்வாழ்வு அகதிகள், மீள்குடியேற்றுகை அமைச்சு விசாரணை செய்யவுள்ளது. (உ-3)

## பிரதமர் நேற்றுக்காலை அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை அமெரிக்கா பயணமானார்.

ஒருவார காலம் அமெரிக்காவில் தங்கியிருக்கும் பிரதமர், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் நாளை திங்கட்கிழமைகலந்து கொண்டு உரையாற்றுவார்.

இதேவேளை, தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்கா மற்றும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோரைப் பிரதமர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்றுமுன்தினம் காலை இலண்டன் பயணமாகியுள்ளார். (த)

## வவு. அகதிமுகாமில் இருந்து 23 குடும்பங்கள் யாழ்ப்பாணம் திரும்பின

(வவுனியா)

வவுனியா அகதிமுகாமிலிருந்து 23 குடும்பங்களைச் சேர்ந்த 97 பேர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் கடந்த 6 வருடங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருந்தார்கள்.

இவ் அகதி முகாமில் தங்கியிருந்த 73 குடும்பங்களைச் சேர்ந்த 284 பேர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வீதிகள் சீரில்லை பேருந்துச் சேவை நடத்துவதில் சிரமம்

(தென்மராட்சி)

யாழ் மாவட்டத்திலுள்ள பல வீதிகள் இன்னமும் குன்றும் குழியுமாக இருந்து வருவதால், அவ் வீதிகளால் பஸ் சேவையை நடத்த முடியாமல் இருப்பதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக பொது அமைப்புகள் மற்றும் பொது மக்களின் பேருந்துச் சேவை, விஸ்தரிப்பு தொடர்பான கோரிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-77)

## தியாகி திலீபனின் நினைவுகள்

### பயணிப்போம் உன்வழியில்

அகிம்சையின் வழியில்
ஆகுதியானவனே திலீபா
உந்தன்
உன்னத தியாகத்தால்
உலகே திகைத்ததடா!

நல்லூர் மண்ணில்
நம்மின விடியலிற்காய்
உன் வாழ்வை
உடைத்து அஸ்தமனமாக்கினாய்!

சுதந்திர வேட்கையின்
சூத்திரம் வகுத்தவன் நீயெடா
தந்திர நரியரின்
குரவளை பிடித்தவன் தானெடா!
தியாகச் சுடராய்
திலீபா! நீயே நெஞ்சில்
என்றும் ஒளிர்கின்றாய்!

ஆகாரமின்றி
ஆறிரு நாட்கள்
அகிம்சையின் மகத்துவத்தால்
அகிலத்துக்குப் பாடம் சொன்னாய்!

திலீபா! - நீ
திரியானாய்! தீபமானாய்!
எம்மின உயிர் விளக்காய்
என்றுமே வாழ்கின்றாய்!

உன்
பாதச் சுவடுகளின் பாதையையும்
உள்ளமதன் வேட்கையையும்
பாடமாக நாம் கொண்டு
பயணிப் போம் உன்வழியில்!

-சூரியநிலா

## 20 மில்லியன் ரூபாவை நோர்வே வழங்கியது

(கொழும்பு)

இலங்கையின் கலாசாரவிழுமியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நோர்வே அரசாங்கம்இலங்கைக்கு 20 மில்லியன் ரூபாவை உதவித்தொகையாக வழங்கியுள்ளது.

இந்த நிதி உதவிவழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ் பேர்க் இதில் கலந்து கொண்டார். (த)

சைவநெறி பாட நூல்களில் உள்ள

## தவறுகளும் திருத்தங்களும் கைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவ நெறிப் பாட நூல்களில் காணப்படும் தவறுகளை இனம்கண்டு அதன் திருத்தங்களை உள்ளடக்கிய கை நூல் ஒன்றினை யாழ். சைவபரிபாலன சபையின் தேர்வுக்கிளை வெளியிட்டுள்ளது.

இதில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான சைவ நெறிப்பாட நூல்களில் காணப்படும் தவறுகளும் அதற்கான திருத்தங்களும அடங்கியுள்ளன.

இதேவேளை, ஏனைய பாட நூல்களிலும் இவ்வாறான தவறுகள் பல காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ)

## வெள்ளைவான் பீதி பெற்றோர் பாதுகாப்பில் பள்ளிசெல்லும் மாணாக்கர்

(யாழ்ப்பாணம்)

"பாடசாலைப் பிள்ளைகளை வெள்ளை வானில் வந்தோர் கடத்திச் சென்றனர்" என்று பரபரப்பாக பலராலும் பேசப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சில தினங்களாகபெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குக் கூட்டிச் செல்கின்றமையை அவதானிக்க முடிந்தது.

உயர் வகுப்பு மாணவர்கள் தவிர ஏனையவர்களை பெற்றோர் தமது பாதுகாப்பில் பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

தவிரவும் தூரப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள தமது பெற்றோர் சகிதம் பேருந்துக்காய் காத்து நின்றனர். (உ-19)

## மீன்பிடி வலைகள் தொடர்ந்தும் களவு

(தென்மராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மீனவர்களின் மீன்பிடிவலைகள்கடலில் வெளியிடத்து மீனவர்களால் கொள்ளையிடப்படும்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக வடமராட்சிகிழக்கு மீனவர்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக இப்பகுதி மீனவர்கள் தமது தொழிலை சுதந்திரமாகச்செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதி மீனவர்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பட்டினிக்குஎதிரான நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மீன்பிடிவலைகளேஇவ்வாறு கொள்ளையிடப் பட்டவைகளில் அநேகம் என அறியப்படுகின்றது. (உ-77)

## 17 ஆயிரம் செயற்கைக் கால்கள்

(தென்மராட்சி)

ஜெய்ப்பூர் செயற்கைஅவயவம் தயாரிக்கும் தொழிற்சாலை கடந்த 17 வருடங்களில் 17 ஆயிரம் செயற்கை கால்அவயவங்களைகுடாநாட்டில் மிதி வெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ளது. (உ-77)

## விதை உ. கிழங்கு பெற நடவடிக்கை

(கோப்பாய்)

உரும்பிராய் கமநல கேந்திர நிலையத்துக் குட்பட்ட விவசாய சம்மேளனங்கள் காலபோகவிதை உருளைக் கிழங்கைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன.

விதை கிழங்கினைப் பெற விரும்பும் விவசாயிகள் தாங்கள் அங்கத்துவம் வகிக்கும் சம்மேளன பொருளாளரிடம் முற்பணமாக 2 ஆயிரம் ரூபாவினைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-79)

இந்து சாதனம்

## வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையின் மாதாந்த இதழான இந்து சாதனத்தின் ஜூலை மாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-8)

## வாடிக்கையாளர்களின் அசண்டையீனத்தால் கடன் வழங்கமுடியா நிலை

(காரைநகர்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் 3 இலட்சத்திற்கும் அதிகமான கடன்நிலுவைகள் வாடிக்கையாளர்களால் செலுத்தப்படாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுயதொழில் முயற்சிக் கடனைப் பெற்றவர்களே இவ்வாறு நிலுவைகளைச் செலுத்தாமல் இருப்பதாகவும்,

இதனால் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு கடனை வழங்க முடியாதிருப்பதாகவும் சம்பந்தப்பட்ட வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-246)

## பரு.மாணவர் விபரங்களை படையினர் திரட்டுகின்றனர்

(திருநெல்வேலி)

பருத்தித்துறைப் பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் விபரங்களைப் படையினர் இரகசியமாக திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின்மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தில்இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பிலேயே இவர்களின்பெயர்கள் திரட்டப்படுவதாக அறியப்படுகிறது.

மேற்படி சம்பவத்துடன், தொடர்புபடுத்தி மீனவர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதும் அறிந்ததே.

இவ்வாறான நடவடிக்கைகள் அப்பகுதி மக்களிடையே அதிருப்தியையும் அதே நேரம் பீதியையும் ஏற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது (உ-43,6)

## யாழ்.பொது நூலகத்திற்கு பாவனைக்குதவாதநூல்கள்

தலைநகர் தமிழ்ப்பாடசாலை அன்பளிப்பு!

(தென்மராட்சி)

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியினால் யாழ்ப்பாணம்பொது நூலகத்திற்கு அன்பளிப்பு என்றரீதியில் அனுப்பிவைக்கப்பட்ட நூல்கள் அவர்களின் நூலகத்தினால் கழித்து ஒதுக்கப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.

ஆயிரக்கணக்கானஇந்நூல்களில் பெரும்பாலானவை பாவிக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் வாசகர்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற நிலையில் இல்லாமல் இருப்பது பற்றியும் தெரியவந்துள்ளது. (உ-77)

# ஆடம்பரங்களின்றித் தமிழ்ப் பண்பில் திளைத்த
# அறிஞர் அண்ணா நாட்டுக்காக உழைத்தவர்

மக்களாட்சி மலர, மக்களைப் பிடித்துள்ள பழமை மடிய, சாதிச் சழக்கு ஒழிய, பெண்கள் சமநிலை அடைய, ஏழைகள் உயர, தொழிலாளர்கள் நன்மை பெற, மூட நம்பிக்கை அகற்றி, சண் மூடிப் பழக்க வழக்கங்கள் நீங்கிட அவற்றை ஆணிவேரோடு கழைந்திட அரும்பாடுபட்டவர் அறிஞர் அண்ணா.

இவற்றிற்காக அவர் ஊதிய சங்கநாதம் 1967 இல் அவரை அரசகட்டிலில் அமர்த்தியது. ஓராண்டுதான் அவர் ஆட்சியில் இருந்தார்; ஆனால், ஆரும் ஆற்றொணாத அரிய செயல்கள் பலவற்றைச்செய்து அழியாப் புகழைத் தேடிக் கொண்டார்.

**தமிழ்நாடு**

உலகப்படத்தில் தமிழ்நாடு என்பதனைப் பொறிக்கச் செய்து மதராஸ் என்பதனை அகற்றினார். சாதியால் இருட்டறையில் இருந்த தமிழ் நாட்டில் கலப்புத் திருமணச் சட்டத்தைக் கொண்டுவந்து தமிழர்களின் கலங்கரை விளக்கானார்.

மது மயக்கத்தில் மங்கிய ஏழைகளின் வாழ்வில் மங்காத விளக்கானார் கள்ளின் களிப்பில் கொள்ளைபோன ஏழைகளின் இல்லங்களில் மகிழ்ச்சியை மீண்டும் கொண்டு வந்தார். மூன்று கோடி மக்களின் இன்ப வாழ்வுக்காக முப்பது கோடி அரசின் வருமானத்தை மதுவிலக்குச் சட்டத்தால் இழந்தார். இவரே உலகின் ஒரே தலைவர்!

குடியால், கூர்த்திவைப்பால் வேறு ஏதோ காரணத்தால் ஏழையான குடும்பங்களில் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோர் சிறுவர்களின் உயர்வுக்கு வழி வகுத்தார் அவரின்



ஆட்சிக் காலத்தில் சிறுவர்கள் எவரும் பிச்சைஎடுக்காது சுய முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்பது வரலாற்று நிகழ்வாகும்.

அ. பொ. செல்லையா
கனடா

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மண மிருக்கும் எனச் சொல்லிக் மாற்றாரின் ஆற்றலையும் தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார்.

**ஆசி பெற்றமை**

1967இல் ஆட்சி ஏற்ற போது தன் தலைவர் வெண் தாடி வேந்தர் ஈவேரா விடம் மட்டுமல்ல மூதறிஞர் ராஜாஜி அவர்களிடமும் ஆசி பெற்றார். பச்சைத் தமிழர் சனம் காமராசர் அவர்களின் அனுபவத்தையும் வேண்டி நின்றார்.

பேருக்கு ஓர் எதிர்க்கட்சி இருந்ததே யன்றி செயலளவில் ஒரு கூட்டரசையே அண்ணா நடத்தினார்.

பார்ப்பனர்களை எதிர்க்காது பார்ப்பனியத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களை மட்டும் எதிர்த்ததால் பகுத்றிவுள்ள பார்ப்பனர்கள் பலராலும் அண்ணாபாராட்டப் பட்டார்.

ஆடம்பரத்தை இளமையில் இருந்தே ஒதுக்கி வந்த அண்ணாஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் எளிமை மேலும் அதிகரித்தது.

'வீட்டில் பூஞ்செடிகள் வளர்க்கும் இடத்தில் குரோட்டன்களும் வளர்க்கலாம், கீரையும் வளர்க்கலாம். குரோட்டன்கள் அழகாகத்தான் இருக்கும், அதே நேரத்தில் செங்கீரை அழகு குறைந்ததல்ல, பயனும் தரும்' எனக் கூறி ஊதியக் குறைப்பையும் உழைப்பின் சிறப்பையும் விளக்கி ஆடம்பரக் குறைப்பிற்கு வழி கோலினார்.

**சீரணிப்படை**

ஓய்வு நேரத்தில் ஊதியமின்றிஊருக்கு உழைப்பதற்குச் சீரணிப்படை அமைத்தார். அவர்கள் தங்கள் முதல் பயிற்சியைக் காவலர்களின் கண்காணிப்பில் பெறுதல் வேண்டும் என்று திட்டம் வகுத்தார்.

முதலுதவி, தீத்தடுப்பு, கோழிவளர்ப்பு, முதியோர் கல்வி, குடும்பக்கட்டுப்பாடு, நல்வழிப்படுத்தல் ஆகியபணிகளில் சீரணிப்படை செயலாற்றத் தொடங்கியது; உழைப்பே உயர்வு தரும் என்பது அண்ணாவின்சீரிய கோட்பாடு.

தினமும் சட்டமன்றநிகழ்வுகள்திருக்குறளைக்கொண்டே தொடங்கப்பட்டது அரச இலச்சினையில் இருந்த'சத்தியமேவ ஜெயதே'என்பது 'வாய்மையே வெல்லும்' என்று தமிழாக்கம் செய்யப்பட்டது.

**இன்று அறிஞர் அண்ணா பிறந்த தினம்**

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த நாளிலிருந்து ஓய்வு ஒழிச்சலின்றி நாட்டு நற்பணியிலும், தமிழ்ப்பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அண்ணாவின்உடல் நலம் குன்றி நலிவுற்றது. அதே நேரம் எழுந்த மாணவர்கள் தொழிலாளர்களின் வன்முறையில் திரும்பிய போராட்டங்களை கடமை உணர்ச்சியோடு மிகநிதானமாக திறம்படச் சமாளித்தார்.

முதலமைச்சர் என்று முத்திரையிட்ட சூழ்நிலையின் கைதியாகத் தனது தம்பிகளுடனான சமூகப்பணிகளைச் செய்திட முடியவில்லை என்ற ஆதங்கத்தை 1969 பொங்கல்மலர் 'காஞ்சி'யில் எழுதியிருந்தார். அதுவே அவரது 'தம்பிக்கு' ஆன கடைசிக் கடிதம்!

மக்கள் அறிவாலயத்தில் தனக்கு சரணாலயம் ஏற்படுத்திக் கொண்ட பேரறிஞர் அண்ணா சான்றோர் வரலாற்றில் ஓர் அமர காவியம். ★

## தொண்டர்களுக்கு சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தில் தொண்டர்சேவையில் ஈடுபட்டவர்களுக்கு விரைவில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும், உற்சவகால பணிகளில் ஈடுபட்ட மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கு மேலதிககொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (உ-19)

## ஓசோன்படை பாதுகாப்பு தினம்

(கல்வயல்)

ஐக்கிய நாடுகள்சபையின் பிரகடனப்படுத்தலுக்கு அமைய எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை ஓசோன் படை பாதுகாப்பு தினமாக அனுட்டிக்கப்படவுள்ளது;

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடத்து இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் போட்டிகளை நடத்துவதும் குறிப்பிடத்தக்கது. (உ-111)

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விளையாட்டு அவை நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பி.ப3 00மணிக்கு யாழ். போதனாவைத்தியசாலை வி.க எதிர்பலாலி ஆசிரிய கலாசாலை வி.க,

பி.ப 4.00 மணிக்கு மதுவரித் திணைக்கள வி.க எதிர் கோப்பாய் ஆசிரியகலாசாலை வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் சுற்றுப் போட்டியில் நாளை பி.ப 4.00 மணிக்குஎவறஸ்ட் வி.க எதிர் சென்மைக்கல்'பி' விக, பி.ப 5.15 மணிக்கு றோயல்வி.க எதிர் பொற்பதி 'எ' வி.க ஆகியனபாசையூர் சென் அன்ரனீஸ் மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## தியாகி திலீபன் நினைவாக மாணவரிடையேபோட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக குடாநாட்டு மாணவர்கள் மட்டத்தில் பேச்சு, கவிதை கட்டுரை மற்றும் சதுரங்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதுதொடர்பான தலைப்புகள் தகவல்கள் என்பனசகல கோட்டக்கல்வி அலுவலர்களுக்கும் வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோட்டமட்டப் போட்டி வலயமட்டப் போட்டி ஆகியன முறையே 18,20ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-19)

## கிராமசேவகர் தரம் II விண்ணப்பங்களை ஏற்க உபதபாலகங்கள் சிலமறுப்பு

(ஈச்சமோட்டை)

அரச வர்த்தமானி அறிவித்தலின்படி கோரப்பட்ட கிராம சேவகர் தரம்II திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை உபதபாலகங்கள் சில ஏற்றுக் கொள்ளாததால் விண்ணப்பிக்க விரும்புவோர் பல்வேறு சிரமங்களை அடைந்து வருகின்றனர்.

இதனால், வலிகாமம், சாவகச்சேரி போன்ற பகுதியிலுள்ள மக்கள் யாழ் பிரதம தபாலகத்தை நாடுகின்றனர்.

விண்ணப்பங்களை ஏற்காத தபாலகங்கள் தமக்கு உரிய அறிவித்தல் வரவில்லை எனக் காரணம் கூறி வருகின்றன. (உ-59)

## துரையப்பா வித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயக்க படையினர் அனுமதிமறுப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தை மீள இயக்குவதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது.

இப்பாடசாலை வளாகத்தில் வெடிப்பொருட்கள் காணப்படுவதாகவும் அவை அப்புறப்படுத்தும் வரை இயங்க அனுமதிக்க முடியாது எனவும் படைத்தரப்பு அதிபருக்கு தெரிவித்துள்ளது.

இதேவேளை பாடசாலையின் சொத்துக்கள் தினமும் களவாடப்பட்டு வருவதாக அதிபர் கவலை வெளியிட்டுள்ளார்.

மேற்படி பாடசாலை இடம்பெயர்ந்து கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (உ-262)

# நீண்டகாலப் பிரச்சினைக்குத் திடீரெனத் தீர்வு காண முடியாது

## தாய்லாந்து புறப்படுமுன் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை கடந்த காலங்களிலும் பார்க்க முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. என்று தாய்லாந்து பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமை தாங்கிச் செல்லும் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தாய்லாந்து புறப்படுமுன்னர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள முதற் கட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக பேராசிரியர் ஜி எல் பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 6 மாதகாலங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள யுத்த நிறுத்தம் அதனால் ஏற்பட்டுள்ள நல்லெண்ணம் என்பவற்றுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் இணைந்தாலும் இந்த நடைமுறை இலகுவானதாக ஒரு போதும் இருக்கப்போவதில்லை. நீண்டகாலப் பிரச்சினைக்குத் திடீரெனத் தீர்வு காணவும் முடியாது.

விடுதலைப் புலிகளுடனான முதற்கட்ட பேச்சுக்களின் போது, சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்ந்துசீரான முறையில் நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவது: நாட்டின் முழுப் பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது; அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது போன்ற விடயங்கள் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படவுள்ளன.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில்எந்தத் தரப்பும் ஓரங்கட்டப்படவும் இல்லை ஒதுக்கப்படவும் இல்லை.

ஆரம்ப பேச்சுவார்த்தையின் பின் இருதரப்பினரும் மாதத்தில் இரு தடவைகள் சந்திக்க வேண்டும். இச் சந்திப்புக்கள் 6மாதங்களுக்காவது தொடர்வதுடன் தற்போதைய உத்வேகம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் விருப்பமாகும் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும்தெரிவித்துள்ளார். (ம

## கியூடெக் வீட்டுஉதவி

(தென்மராட்சி)

வன்னியில் இருந்து இளவாலை, சாவகச்சேரி, பருத்தித்துறை பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள வறுமைக் கோட்டுக்குள் உள்ள குடும்பங்களுக்கு கியூடெக் நிறுவனம் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்து வருகின்றது. (உ-77)

## சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வு எதிர்வரும் 2003 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை 66,கல்லூரி வீதி நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தபால் மூலமோ நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம் என தேர்வுச் செயலாளர் வ. சந்தசாமி அறிவித்துள்ளார். (உ)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் விரைவில்

கடந்த ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

இப் பரீட்சை முடிவுகளை WWW. doenets. lk என்ற இணையத்தளத்தில் பெற முடியும். (உ-3)

# இன்று ஒரு தகவல்

## மனமும், குரங்கும் சரியே!

ஒரு தடவை பேர்ணட் ஷாவைப் பார்த்து 'உலகம் ஏன் உங்களைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகின்றது' என்று கேட்டார்களாம். அதற்கு அவர் 'ஒரு வருஷத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேல் யாரும் சிந்திப்பது கிடையாது. நான் வாரத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை சிந்திக்கின்றேன். அதுதான் உலகம் என்னைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது' என்று சொன்னாராம். இதிலிருந்து என்ன தெரிகிறது? மனிதர்கள் யாருமே அதிகமாகச் சிந்திப்பதில்லை என்று தெரிகிறது.

மனது சுத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் சிந்தனை தெளிவாக இருக்கும். மனது எந்த அளவுக்குச் சுத்தமாக இருக்கவேண்டும் தெரியுமா? மார்க்கஸ் அரேலியர் என்ற அறிஞர் அதற்கு ஓர் அளவுகோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன்னர் ஒருவர் வந்து நின்று, 'இப்போது நீங்கள் என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்... அப்படியே சொல்லுங்கள்!' என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே 'இதைத்தான் இப்போது நான் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்' என்று சுலபமாகச் சொல்லக்கூடிய அளவுக்கு மனது இருகக வேண்டுமாம். அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர். அப்படிச் சொல்லக் கூடிய நிலைமையிலேயா நாம் எல்லோரும் இப்போது இருக்கிறோம்?

'வெளிப்படையாகப் பேசுங்கள் சார்!' என்று கேட்டால்.. 'அது எப்படி சார்...? மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?' என்று தானே கேட்கிறோம். அப்புறம் எங்கே மனம் சுத்தமாவது? நம்மில்பலர் மனதை ஒரு கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது சும்மாவா சொன்னார்கள்... மனது ஒரு குரங்கு மாதிரி என்று. அது சரி... மனதுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கின்றன. இதுதான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை, எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார், 'மனது, குரங்கு இவை இரண்டையும் எப்போதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும் ... இல்லை என்றால் நமக்குத்தான் கஷ்டம்' என்றார். 'எப்படி?' என்றேன், அதற்கு அவர் ஒரு கதை சொன்னார்.

அதாவது ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தாராம், அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்தாராம், ஒரு சுவரின் ஓரமாக அது மிகவும் சாதுவாக உட்கார்ந்திருக்குமாம். அப்படி இருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒரு குச்சியால் அதற்கு இரண்டு அடி கொடுப்பாராம், அந்த அடியை வாங்கிக் கொண்டு அங்கேகிடைக்கிற ஆகாரத்தையும் சாப்பிட்டுக் கொண்டு அது மிகவும் சாதுவாசக்காலம் தள்ளிக் கொண்டிருந்தது

அந்த ராஜாவுக்குப் புதிதாக ஒரு மந்திரிவந்தார். தினமும் ராஜாவுடன் இருப்பார்.. போவார்... வருவார்! ராஜா அந்தக் குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார். அவருக்கு மனதுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. 'அரசே! என்ன அநியாயம் இது? வாயில்லா ஜீவன்... அதுவுமல்லாமல் அதுமிகவும் சாதுவாக ஒரு மூலையிலே உட்கார்ந்திருக்கிறது. அதைப்போய் தினமும் அடிக்கிறீர்களே!' என்றார், இராஜா பார்த்தார், 'சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுக்கிறேன். இன்றிலிருந்து இந்தக் குரங்கை அடிப்பதை விட்டுவிடுகிறேன், இதோ குச்சியைக் கீழே போட்டுவிடுகிறேன்' என்று போட்டுவிட்டார்.

அதன் பின்னர் சாயந்தரம் தினமும் ராஜாவும், மந்திரியும் அந்தப்பக்கமாக வருவார்கள். போவார்கள். ராஜா அடிக்கவில்லை என்றதும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது, அடுத்தநாள் ஓடிவிளையாட ஆரம்பித்தது. அப்புறம் ராஜாவிடம் ஓடிவந்து கொஞ்ச ஆரம்பித்தது அடுத்தநாள் அவர் இடுப்பிலே ஏறி உட்கார்ந்தது. அதற்கடுத்தநாள் ராஜாவின் தோளிலே ஏறி உட்கார்ந்தது அடுத்து என்ன செய்தது தெரியுமா? ராஜாவின் தோளில் ஏறி உட்கார்ந்து-அந்தக் குச்சியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது. மந்திரி பார்த்தார், என்ன இது ராஜா என்கின்ற மரியாதை இல்லாமல் ... என்று சொல்லி அந்தக் குச்சியைப் பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்து விட்டார்.

இப்போது ராஜா மந்திரியைப் பார்த்து, 'இதே வேலையைத்தானே நான் ஆரம்பத்திலேயே செய்து கொண்டிருந்தேன்' என்றார். இப்போது அந்த மந்திரிக்கு புரிந்தது- குரங்கையும் மனதையும் அடக்கி வைத்திருக்கிறவரையும் தான் அடங்கியிருக்கும் என்பது சில சமயம் குரங்கைவிட மோசமான மனம், நம்மவர் சிலரிடம் உண்டு.

திருக்குற்றாலத்தில் ஒரு தடவை ஒருஆள் கையில் வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாகஓடிக் கொண்டிருந்தான் பின்னால் ஒரு குரங்கு துரத்திக் கொண்டே ஓடி வந்தது அதற்குப் பின்னால் ஒருவர், அவர்கள் இரண்டு பேரையும் துரத்திக் கொண்டு வெறுங் கையோடு ஓடிவந்தார்.

வழியிலே ஒருவர் இந்த ஆளைத்தடுத்து நிறுத்தி அந்த ஆள் தான் கையில் வாழைப் பழம் வைத்திருக்கிறான். குரங்கைப் பார்த்து விட்டு ஓடுகிறான். அது நியாயம், குரங்கு அந்த வாழைப்பழத்தைப் பார்த்து விட்டது. அதனால் அவன் பின்னால் ஓடுகிறது அது நியாயம். நீ எந்தச் சம்பந்தமும் இல்லாமல் இப்படி அவர்கள் பின்னால் ஓடுகிறாயே இது என்ன நியாயம் என்று கேட்டார். 'நான் ஓடுவதுதான் நியாயம் என்றார் இவர். எப்படி? என்று கேட்டார் அவர். 'அந்த ஆள் என் கடையிலே தான், வாழைப் பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகிறான் சார்' என்று சொல்லி விட்டுத் துரத்த ஆரம்பித்தார். இவர் ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உப உணவுப் பயிர்ச்செய்கையில் குடாநாட்டவர் நாட்டம் குறைவு

(தென்மராட்சி)

யாழ் மாவட்டவிவசாயிகள் உப உணவுப்பயிர்செய்கையில் ஈடுபடுவதில் பெரும் அக்கறைசெலுத்தாமல் இருக்கின்றனர் என விவசாய விஸ்தரிப்புப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கை 2 ஆயிரத்து 184 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்படவேண்டும். ஆயினும் இன்றைய நிலையில் ஆயிரத்து 285 ஹெக்டயரில் மட்டுமே செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

இதேசமயம், ஏ - 9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து கௌப்பி, கடலை, பயறு, உழுந்து போன்றவை யாழ். மாவட்டத்துக்கு பெருமளவில் எடுத்துவரப் படுகின்றன.

இது இவ்விதமிருக்க உப உணவுப் பயிர்ச் செய்கையை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு உற்பத்திச் செலவு மிகவும் கூடுதலாகவே இருந்து வருகின்றது எனவும், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கைக்குப் பெரும் பொருட் செலவு ஏற்படுவதில்லை எனவும் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் 899 ஹெக்டயர் நிலப்பரப்பு பயன்படுத்தப்படாத நிலையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## யாழ் மாவட்டத்தில் 5 இலட்சம் பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில்உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 441 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து31 ஆயிரத்து 901 பேர் வசிப்பதாக அண்மையில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள்தெரிவிக்கின்றன. (உ)

## கொலரா விழிப்பு

(காரைநகர்)

காரைநகரில் கொலரா நோய் வேகமாக பரவுவதற்கான அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்து அதனைத் தடுக்கும் பணியில் சுகாதாரப் பிரிவினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், தண்ணீர் பவுசர் வண்டிகளிலும், மக்கள் கூடுகின்ற முக்கிய இடங்களிலும் ஒட்டப்பட்டு வருகின்றன. (உ-246)

## ச.ச. நிலையம் மீள இயங்குகிறது

(அராலி)

வட்டுக்கோட்டை வடக்கு நேருஜி சன சமூக நிலையம் மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்தகால இடப்பெயர்வை அடுத்து மேற்படி சனசமூக நிலையம இயங்காது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-214)

## உதவிப் பதிவாளர்களாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக் கழகத்தில் எழுது வினைஞர்களாக பணியாற்றிய இரா. இராஜேஸ்வரன், என். தவராசா ஆகியோர் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு உதவிப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ளனர். (உ-19)

## முதியோர் தின போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையொட்டி கோப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாலர் பிரிவு தொடக்கம் உயர்தரப் பிரிவுவரை 4 பிரிவுகளாக இப்போட்டிகளை நடத்தி, தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்களை அதிபரின் விதப்புரையுடன் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-79)

## தாய்லாந்து பேச்சு வானொலி ஒலிபரப்பும்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நாளை ஆரம்பமாகி எதிர்வரும் 18ம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தை விபரங்களை' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், விசேடமாக ஒலிபரப்புச்செய்யுமென்று அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு வெற்றிடங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வலயக்கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களில் சேவைக்காலஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை மாகாண கல்வித்திணைக்களம் மேற் கொண்டுள்ளது.

இந்தவகையில் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மாகாண கல்விப் பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு –1, 2–1, 2-11 ஆகிய தரமுடையோர் மாத்திரமே சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் என மாகாணகல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த மாநாடு

(காரைநகர்)

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அகிலஇலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த மாநாட்டிற்கு யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அகிலஇலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவர் பிலியந்த ரூபசிங்க தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகாகுமாரனதுங்கா கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் நடைபெறும் இவ்வாறான மாநாட்டிற்கு யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வது இதுவே முதற்தடவையாகும்.

அண்மையில்யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்சங்கம் அகில இலங்கை தாய்ச்சங்கத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

## உலக குடியிருப்பு தினம் உள்ளூராட்சி மன்றங்கள் ரீதியாக அனுட்டிப்பு

(சுதுமலை)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உளள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் உலக குடியிருப்பு தினத்தை எதிர்வரும் அக்டோபர் மாதம் 7ஆம் திகதிகொண்டாடுமாறு வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் பணிப்பாளர் து.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்ற தலைவர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

இம்முறை உலக குடியிருப்பு தினத்தின் முக்கிய குறிக்கோள் ஒரு நகரில் இருந்து இன்னொரு நகருக்கான ஒத்துழைப்புஎன்பதை கருப்பொருளாக வைத்து பல நிகழ்வுகளை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

பூமியில் நகர அபிவிருத்தி மூலம் வாழ்க்கை முறையை உயர்த்துவது சம்பந்தமாக சகல மககளிற்கும் அறிவுறுத்த வேண்டும்.

உலக சனத்தொகையில் இன்று அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் நகர்பகுதியில் வாழ்கிறார்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கூடிய கவனம் பூமியின் நகர அபிவிருத்தி சம்பந்தமாக செலுத்தப் பட்டுள்ளது. இதனால் இன்று குடிசைகளில் வாழ்கின்ற மக்களில் ஒருதொகையினர் நகர்ப்புறத்திற்கு மாறி வருகின்றார்கள். இதுதொடர்பாக புதிய சட்டங்கள் விரைவில் அமுல் படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்பநடவடிக்கையாக மாகாணஉள்ளூராட்சி மன்றங்களில் உலக குடியிருப்பு தினம் (7-10 2002) என்றவாசகம் எழுதப்பட்டு முக்கிய மக்கள் கூடும் பொது இடங்களில் ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம்14ஆம்திகதி வரை தொங்கவிடநடவடிக்கைஎடுக்கவேண்டும்என மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

# 15 ஆம் ஆண்டு நினைவு நாட்கள்

(15 . 09 . 2002 – 26.09.2002)



# லெப்.கேணல் திலீபன்

## (இராசையா - பார்த்தீபன்)

"என்று இந்தக்கோட்டையில் புலிக்கொடி பறக்கிறதோ அன்று தான் எமது சுதந்திரவிடிவின் ஆரம்பம்"

- தியாகி திலீபன் -

அரசியல்துறை, யாழ்மாவட்டம்.

## சமாதான நகர்வுகளில் திருப்தி!

# ஐரோ. ஒன்றியம் 1.8 மில்லியன் யூரோவை

# இலங்கைக்கு உடனடியாக வழங்கும்

(கொழும்பு)

தாய்லாந்து சத்தாஹிப்டற்படைத்தளத்தில்தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும இடையில் நாளை ஆரம்பமாகவுள்ள முதற் கட்டப் பேச்சு வார்த்தைகளை ஐரோப்பிய யூனியன் வரவேற்றுள்ளது.

இந்த அடிப்படையில், வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு 1.8 மில்லியன் யூரோ நாணயத்தை உடன் வழங்கவும் ஐரோப்பிய யூனியன் முன் வந்துள்ளது.

அத்துடன், வடபகுதிக்கான ரயில் பாதைகளை புனரமைக்கவும், யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை மீளக குடியேற்றவும் 4 மில்லியன் யூரோ டொலர்களை எதிர் காலத்தில் வழங்கவுள்ளதாகவும் ஐரோப்பிய யூனியன் உறுதியளித்துள்ளது.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தும், இடம் பெயர்ந்தும், சுமார் 8 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருவதாகவும் ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கடந்த பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்பு செய்வதற்கென பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மூவர் சுட்டுக் கொலை

ஜம்மு காஷ்மீர் குபாரா மாவட்டத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதலில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் மூவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீ நகர் அருகே தீவிரவாதிகள் வைத்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டதால் பெரும் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். (உ)

## வீரப்பன் வேட்டைக்கு!

# காட்டுக்குச் சென்ற படைகள்

# நாட்டுக்குத் திரும்புகின்றன

(புதுடில்லி)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனைத் தேடும் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

இத் தகவலை கர்நாடகமுதலமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

நாகப்பாவின் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்குஇணங்கவே தேடும்பணி கைவிடப் பட்டிருப்பதாகவும்,

நாகப்பாவை மீட்டுவரும் வகையில் வீரப்பனுடன் பேச்சு நடத்த தூதுவரை அனுப்ப முடிவு செய்திருப்பதாகவும் கிருஷ்ணா மேலும் தெரிவித்துள்ளார்.

வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினரில் ஒரு தொகுதியினர் வாபஸ்பெறப் பட்டிருப்பதாக கர்நாடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

## எண்ணெய்த்தாங்கிக் கப்பல் தீப்பற்றியது

பீக்கிங்)

சீனாவிற்குச் சொந்தமான எண்ணெய்த் தாங்கிக் கப்பல் தீப்பற்றியதைத் தொடர்ந்து வெடித்துச் சிதறியுள்ளது

சீனாவின் தென்பகுதிக் கடற்பரப்பில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாகதெரியவந்துள்ளது.

புயல் காற்றிலிருந்து கப்பலைப் பாதுகாக்க மாலுமிகள் முயற்சித்தபோது கப்பல் கடற்பாறைகளுடன் மோதுண்டமையினால் இத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. (உ-3)

## நெடுமாறனுக்கு 26 வரை தடுப்புக் காவல்

(புதுடில்லி)

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ நெடுமாறனை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு திருச்செந்தூர் நீதிமன்ற நீதிவான் வளம் பிறை உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பழ நெடுமாறனை ஆஜர்படுத்திய போதே நீதிவான் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொடா தடைச் சட்டத்தின் கீழ் தமிழக அரசு இவரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7,8)

## ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்குமாறு ஈராக்கிற்கு அழுத்தம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் தாக்குதலைத் தடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்களை மீண்டும் அனுமதிக்க வேண்டும் என ரஷ்யா உட்பட ஐரோப்பிய மற்றும் அரபு நாடுகள் ஈராக் இடம் வேண்டுதல் விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு ஈராக் கட்டுப்படவில்லையாயின் அதற்குரிய பலாபலரை ஈராக் அனுபவிக்க வேண்டிவரும் என ரஷ்யா கருத்து வெளியிட்டுள்ளது.

முன்னதாக ஐரோப்பிய ஒன்றியம், விடுத்த அறிக்கை ஒன்றில், இனியும் ஆயுதப் பரிசோதகர்களை ஈராக அனுமதிக்காமல் இருப்பது நாட்டுக்கு உசிதமான விடயம் அல்ல எனவும்,

அணுவாயுத இரசாயன குண்டுகள் போன்ற பேரழிவுகளை உண்டுபண்ணும் ஆயுதங்களை ஈராக் உற்பத்தி, செய்யவில்லை என உறுதிப் படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

# சோதிட பலன்

யில் அமைத்துக் கொள்வதாலும் வைடூரியம் அணிவதாலும் மேற்குறிப்பிட்ட கெட்டபலன்கள் குறையும்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சந்திரனும், குருவும் அமைந்திருப்பதால் புதன் ஆதிக்கமான 14,23,41,50 59, போன்ற எண்களிலும் குரு ஆதிக்கமான 21,39 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-7,3 யோகமான தேதிகள்-7,16, 25,3,12,21,30,5,14,23, யோகமான மோதிரக்கல்-வைடூரியம், முத்து, யோகமான நிறம்- வெளிர்மஞ்சள், வெளிர்நீலம், ஆகாத நிறம்-சிவப்பு ஆகாத தேதிகள்-9, 18, 27, 6, 15, 24,

### உடல் எண்-2 உயிர் எண் -4

2, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும கூடிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வந்தால் இவர்கள் சந்திரன், இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவார். ஏதாவது ஒரு கவலையை நினைத்துக் கொண்டு இருப்பார். சந்திரன் பக்கத்தில் இராகு சென்றால் எவ்வாறு கிரகணம பிடித்துக் கொள்கிறதோ. அதைப் போன்று இவருடைய வாழ்க்கையில் பெறவிருக்கும் நன்மைகள் எல்லாம கிடைக்காது போய்விடும். பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் மேற் குறிப்பிட்ட கெடுதலிலிருந்து, நீக்கப் பெற்று யோகமான வாழ்க்கையை அடைவர்.

பெயர் அவ்வாறு சரியாக அமையாவிட்டால் ஆரோக்கியம், குடும்ப வாழ்க்கை, வருமானம, குழந்தைகள் இவைகளில் ஏதாவது ஒன்று பாதிக்கப்படலாம் சிறிய பிரச்சினைகள் வந்தாலும அது முடியும் வரை சுறுசுறுப்பாகச் செயல படுவர். இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் உத்தியோகத்திலிருந்தாலும், தொழில் செய்ய முற்படுகின்றனர் சிலர் வழக்குகளைத் தீர்ப்பதால் புகழும், பிரசங்கம் செய்வதால்புகழும அடைகின்றனர்.

### கதை கவிதை எழுதுபவர்

வாகனங்கள், அழகு சாதனங்கள், போன்றவைகளை வியாபாரம் செய்து உயர்வர். சிலர் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலமும் உயர்கின்றனர். இவர்கள் எந்த லாகிரி (போதை) வஸ்துகளை உபயோகிக்கக் கூடாது. கற்பனை சக்தி அதிகம் கொண்ட இவர்கள் தாங்கள் கண்ட காட்சிகளை வருணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். கவிதை, கதை எழுதும் ஆற்றலும் படைத்தவர்கள். ஆனால் எதிலும் நிரந்தரமாக இருக்கமாட்டார்கள். இயற்கையாகவே கிரகணம் பிடிக்கப்பட்ட இவர்கள் கடவுள் பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துப் போக வேண்டும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் பல கஷ்டங்களை அனுபவித்த பின் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொண்டு, மிகமேன்மையான நிலையை அடைந்துள்ளனர். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எண்களில் பெயரை மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

### தொழில்

இந்த எண்ணிக்கையில் பிறந்த இவர்களுக்குக் கல், அழகு சாதனங்கள் தூரதேசத்திற்குப் பொருளை அனுப்புதல் போன்றவற்றால் லாபம் கிடைக்கும். வாகனம், தோல், பேச்சாலும், எழுத்தாலும் லாபம் கிடைக்கும்.

### நோய்

பெயர் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமையவிட்டால் மனநோய்வரும். மற்றபடி நீர் சம்பந்தமான நோய், மூலக்கடுப்பு, மூட்டு வலி, பல்வலி, முதுகு வலி போன்றவைகள் வந்து நீங்கும், சிலருக்கு ஆபரேஷன் ஏற்பட்டுவிடுகிறது. இதனால் இந்த எண்ணிக்கைக்காரர்கள் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

### பெயர் அமைக்கும் முறை

சந்திரனுடன் இராகு சேருவதால் சந்திர கிரகணம் என்றே சொல்ல வேண்டும். இவர்கள் சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களில் பெயரை மாற்றி அமைத்துக்கொள்ளுவது நல்லது. நோய் உள்ளவர்கள் 42 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

### பின் பற்ற வேண்டியவை

யோகமான எண்- 6,7 யோகமானதேதிகள் 6, 15, 24; 2, 11, 20, 29; 1, 10, 19, 28, யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து யோகமான நிறம்- வெளிர் மஞ்சள் வெளிர் நீலம், பச்சை ஆகாத தேதிகள்-9, 18, 27; 8, 17, 26- ஆகாத நிறம்-கறுப்பு, சிவப்பு.

(தொடரும்)

# ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில்

# இந்.பிரதமர், முஷாரப்புக்கு சாட்டையடி

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் அணு ஆயுத மோசடிகளில் ஈடுபடுவதாகவும் இந்தியாவிற்கெதிரான அரசுக் கொள்கையில்பயங்கரவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன் படுத்துகின்றதென்றும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும்ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், ஜம்முகாஷ்மீரில் சுயநிர்ணய உரிமை என்ற பெயரினால் ஏதுமறியாத மக்களைக் கொல்வதைத் தூண்டி விடும் பாகிஸ்தானை மன்னிப்பதில்ஒரு சர்வதேசக் கூட்டணி ஈடுபடுகின்றது என்று குற்றம் சாட்டினார்.

ஐ நா.பாதுகாப்பு மன்றத்தின் பயங்கரவாத முறியடிப்புச்சபை பயங்கரவாதிகளுக்கு பயிற்சியும் நிதியும், புகலிடமும் ஆயுதமும் வழங்கி ஆதரவளிக்கும் அரசுகளைப் பணியவைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் ஜம்முகாஷ்மீர் தேர்தல் பற்றி பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் பேசியதைக் கண்டித்த பிரதமர், கருத்து வாக்கெடுப்பிற்காக தேர்தல் தில்லுமுல்லுகளைச் செய்தவர்கள் சுதந்திரம் பற்றியும், ஜனநாயகம் பற்றியும், உபதேசிக்கக் கூடாது என்றார்.

தெற்காசியாவில் அரசு ஆதரவிலான பயங்கரவாதம் என்ற அம்புராத் துணியில் ஒரு புதிய அம்பாக கடந்த சில மாதங்களில் அணுவாயுத மோசடி சேர்க்கப்பட்டுள்ளது என்றும் பாகிஸ்தானை மறைமுகமாகச் சாடினார்.

எல்லைதாண்டி ஏவப்படும் பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா எடுக்கும் நடவடிக்கையினால் அணுவாயுதப் போர் மூளக் கூடியஅபாயத்தை ஏற்படுத்தும் அளவிற்கு அச்சுறுத்தல்கள் விடப்படுகின்றன.

இத்தகைய அணுவாயுத பயங்கரவாதத்திற்கு அடிபணிந்தால் செப்ரம்பர் 11 இல் ஏற்பட்ட மனிதகுல துயரத்தை மறந்தவர்கள் ஆவோம்.

பாகிஸ்தானுக்கு பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் சர்வதேச கூட்டணியில் இடம் பெற என்ன அருகதை இருக்கின்றது? பாகிஸ்தானில் ஜனநாயகத்தை நிலை நாட்டப் போவதாக பிரகடனம் செய்த அதிபர் முஷாரப் தேர்தல் நடத்துவதற்கு முன்பாகவே ஜனநாயகத்தை முடக்கிவிட்டார் என்றும்பிரதமர் வாஜ்பாய் குற்றம் சாட்டிப் பேசினார். (உ)

## கொலம்பிய ஜனாதிபதி வேண்டுகோள்

(பொஹோரா)

பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதேவேளை போதைவஸ்து கடத்தலுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொலம்பிய ஜனாதிபதி ஜவாறோ யுரோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது சபைகூட்டத்தில் விசேடஉரையாற்றிய இவர் சர்வதேச சமூகம் இது விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-7)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து துன்னியார் துன்னிச் செயின்.
குறள்

# வலம்புரி

## சர்வதேசத்தின் பார்வை!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை நாளைய விடிவில் தாய்லாந்தில் நடைபெறப் போகிறது. இறைவா! இது காணும் பட்ட துன்பங்கள் போதும், துயரங்கள் பலவகை ஆனால் ஈழத் தமிழர்கள் பட்ட துன்பமோ பிரிவுத்துயர். பிரிவுத்துயர் எனில் அது உயிர்பிரிவு நிவாரணம் தேடமுடியாத பிரிவு அத்துயரை அனுபவித்தவர்களே அதன் தாக்கத்தை உணர முடியும்.

உடலால்- உள்ளத்தால் நலிந்து இந்தஉலக வாழ்க்கையையே வெறுக்க வைப்பது அது மனித சுதந்திரம்-தேசத்தின் சுதந்திரம் எல்லாம் பிரிவுத் துயருக்குப் பிந்தியவையல்ல இருந்தும் கடந்த இருபது வருடகால யுத்தத்தில் ஷெல்லுக்கும், விமானத் தாக்குதலுக்கும் தங்கள் உயிர்களைத் தானம் கொடுத்தவர்கள் எண்ணிலர்.

கரம் கூப்பி நின்று உயிர்ப்பிச்சை கேட்க காடையர்கள் தம் துப்பாக்கியால் சுட்டுத்தள்ளிய உயிர்கள் தாம் எத்தனை.படகுகளில்,பாலங்களில் பதைக்கப்பதைக்க வெட்டுண்ட பாலகர்கள் எத்தனை இப்படியே தமிழினம் அழிவுற்றுப்போன சோகங்கள் இன்னமும் அடிமனங்களில் படிந்து போயுள்ளது.

காணாமல் போன பிள்ளைகளை தேடும் பெற்றோர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. இப்படியே நீண்டு செல்லும் சோகங்களின் பட்டியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பூர்வாங்க நிகழ்வே நாளை தாய்லாந்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையாகும்.

இலங்கையின் யுத்த வரலாற்றில், சமாதானப் பேச்சுவார்த்தை என்பது புதிதான விடயமல்ல பல தடவைகள் நடந்துஇடையில் முறிந்துபோன ஒன்றுதான்- எனினும் நாளைய பேச்சு வார்த்தை நோர்வேயின் துணையுடன் சர்வதேசத்தின் உன்னிப்பான கண்காணிப்பில் தாய்லாந்தில் நடைபெறுகிறது.

எனவே இங்கு யார் பேச்சை முறித்தாலும் அவர் சர்வதேசத்தால் இனங்காணப்படுவர் என்பதால் இருதரப்பும் மிக மிகவிழிப்பாக பேச்சுக் குழம்புவதற்குத்தாம் காரணமாகாத வகையில் நடந்து கொள்வர் என்பது திண்ணம்.

# இறைவனின் திட்டத்துக்குஇணங்கிவாழ்வதாயின்
# மன்னிக்கவும், மனிதத்தை மதிக்கவும் வேண்டும்

## பரமபிதா காட்டிய பாதை



இம் மண்ணுலகில் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகை விட்டுப் பிரிந்தே ஆக வேண்டும். அதற்குள் நாம்எத்தனை சற்பனைகளை வளர்த்துக் கனவு காண்கின்றோம். நம்மைநமது சுற்றத்தைநாலு பேர் மதிக்க வேண்டும் என்றெல்லாம் அங்கலாய்க்கின்றோம்.பணத்தைச் சேர்த்து பேரோடும் புகழோடும் பல்லாண்டுகள் கஷ்டமில்லாமல் மற்றவர்கள் பணிவிடை செய்ய வாழ்வைக் கழிக்கின்றோம் இத்தகைய வாழ்வு ஒரு வாழ்வல்ல' நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்குஒருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்' (உரோ 13:8) என்று புனித பவுல் கூறுகின்றார்.

எத்தனை தடவைமன்னிப்பு

உலகிலே ஏற்படும் பிரச்சினைகளுக்குக் காரணம் அளவுக்கு அதிகமான ஆசையே. மற்றவர் மதிக்கப்படாமைக்கும், மதிக்கப்படுகின்றமைக்கும் அதுவே மூலகாரணமாகும். 'ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரியவன் (செல்வன்) என்று ஆன்மீக ஞானி சிவானந்தர் கூறுகிறார்·மனிதனாகப்பிறந்ததின் பயனே மற்றவரை அன்பு செய்து வாழ்வது தான். மற்றவர்களை மன்னிக்க முடியாதவன் மற்றவரின் துன்பங்களை உணர முடியாதவன் மனிதத் தோற்றத்திலுள்ள விலங்காவான். அப்படியாயின் எமக்கு எதிராகக் குற்றம் செய்பவர்களை எப்படி நாம் மன்னிக்க முடியும்? இயேசுவின் சீடர்களில் பேதுரு ஒருநாள் இயேசுவிடம் சென்று ஆண்டவரே என் சகோதர சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்தால் நான் ஏழு முறை மட்டும் மன்னித்தால் போதுமா என்று கேட்க இயேசு மறு மொழியாக 'ஏழு முறை மட்டுமல்ல எழுபது

**அன்ரனி பீற்றர்**

தடவை ஏழுமுறையெனநான் உனக்குச் சொல்கிறேன்' என்றார் (மத்.18 21-22)

குடும்பங்களின் கீழ்நிலை

ஒருவர் மற்றவர்களுக்கென்றுவாழவேண்டுமென்றே இறைவன் குடும்பத்தை உருவாக்கினார். ஆனால் இன்று அப்படியான ஒரு வாழ்வைக் குடும்பங்களில் எதிர்பார்க்க முடியாதுள்ளது. தத்தமக்கென்ற சுய கௌரவம் தலை தூக்கி பிளவுகளையும் பிரிவினைகளையும் காண்கின்றோம். குடும்பங்களின் நிலையே சமுதாயத்திலும், நாட்டிலும் தாழ்ந்துகிடக்கின்றன. அன்னியக் கலாசாரம் அதிரடி வேலை செய்யும்ஊடகங்கள் அன்புக்கு எதிரான அன்னியத்தன்மையைத்தூண்டுகின்றவை. தீமையின் வல்லாதிக்கம் பாதிப்புநன்மைக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்கின்றது.

மனிதத்தை மதித்தல்

வாழ்வின் இலட்சியம் இன்டம் மட்டுமல்ல, நம்மையும் பிறரையும் நல்லவராக்குவதே, எனவே, கிறிஸ்தவன் இவ்வாறு தான்வாழ வேண்டுமென்று புனித பவுல் கூறுகிறார். நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை. தமக்கென்று இறப்பதுமில்லை. வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம், இறக்கின்றோம் (உரோ 14: 7-8) எனவே, கண்ணால் காணும் சகோதரர்களிடமே நாம் ஆண்டவரைக் காண வேண்டும். அவர்களையே மன்னித்து அன்பு செய்து, உறவை வளர்க்க வேண்டும். பொன், பொருளிலும் மேலாக மனிதத்தை மதிக்க வேண்டும். அப்போதே நாம் ஆண்டவருக்குரியவர்களாக வாழவும், இறக்கவும் தகுதி பெறுகின்றோம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை பொருளாதார·முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், புரிந்துணர்வைவளர்க்கப்பாடுபடுவதாகவும் பேசப்படுகின்றது. உண்மையும் உளச்சுத்தமுமே உறுதிப்பாட்டைவளர்க்கக் கூடிய தாகும். கண்ணியமான நடத்தையும், கடின உழைப்புமே பலனைத் தருவதாகும். எனவே, ஒருவர் ஒருவரிலே நம்பிக்கை கொண்டு, நட்புறவைக்கட்டியெழுப்பும், இறைவனின் திட்டத்திற்கு அமைந்து செயற்படவும் இறை நம்பிக்கையை கட்டியெழுப்புவோமாக, பழையனவற்றைக் களைந்து விட்டு, புதியனவற்றை மட்டும் கடைப்பிடிக்காமல் மரபுகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் எம் வாழ்வியலில் சேர்த்துச் செயல்படுவோமாக,

## சோதிட பலன்

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து
# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**உடல் எண்-2 உயிர் எண்-3**

2-11- 20 - 29 போன்ற தேதியில்பிறந்து, தேதி, மாதம் வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் சந்திரன், குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 2 எண்ணாகிய சந்திரன் சலனமடைவதாக இருந்தாலும் 3 எண்ணாகிய குரு உயிர் எண்ணாகவருவதால் இவர்கள் தன்னலத்துடன் பொது நலம் கலந்த வாழ்க்கையை நடத்துவார்கள். பலரிடம் நல்ல பெயரும் பொறாமையால் கெட்ட பெயருக்கும் ஆளாவார்கள் சுய கௌரவமுடைய இவர்கள் பிறர் இழிவாகப் பேசினால், உடனே எப்பதவியையும் துறக்கத் துணிவர்.

சூசகமான அறிவுடைய இவர்கள் எதிரியைப் புரிந்து கொள்ளுவர் தன்னைத் தேடி வருபவர்களையும் தன்னை மதிப்பவர்களையும், உயர்த்துவதற்கான வழிவகைகளைக் கூறி அவர்களிடம் கெட்டிக்காரர் என்ற பெயரைத் தட்டிச் செல்லும் திறமையுடையவர்கள். திடீரென்று ஒரு காரியத்தில் இறங்க மாட்டார்கள் அப்படி இறங்கிவிட்டால் எவ்வழியிலாவது வெற்றி பெறுவர். பெயர் பிறந்த எண்ணுக்குப் பொருத்தமானதாக அமையாவிட்டால், கெட்ட பெயரும், துன்பமும் உண்டாகும். இதனால் மனமுடைந்து மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகள் வயோதிபத்தில் ஏற்படும்.

**வெற்றி பெறுவர்**

தேசபக்தியும் சமுதாயத்தை உயர்த்தும் நோக்கமும் கொண்ட இவர்கள், உத்தியோகத்திலிருந்தாலும் சொந்தத் தொழில் செய்தாலும், எப்பொழுதும் பலருக்கு உதவ முன்வருவர் இவர்களைப் புகழ்ந்து பேசி, நீங்கள் தான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றால் உடனே தன்சக்தியெல்லாம் பயன் படுத்தி வெற்றியைத்தேடுவர். இப்படிப்பட்ட நல்லமனம் கொண்ட இவர்களைச் சிலர் வஞ்சிக்கப் பார்ப்பர் ஆனால் ஆண்டவன் இவர்களைக் கைவிடுவதில்லை. பெயர் பொருத்தமின்றி இருந்தால் முன்னேற்றம் குறைந்து விடும்.

பெரிய அபாயங்களிலும் வாழ்க்கைப் போராட்டங்களிலும் ஆண்டவன் அருளால் வெற்றியடைவர் ஆரம்ப வாழ்க்கை எளிமையாக இருந்தாலும், பெயர் பொருத்தமானதாகஅமைந்துவிட்டால் மிகச் சிறந்த வாழ்க்கை அமையும். எவருக்கும் கெடுதல் நினைக்காத இவர்கள் தெய்வ நம்பிக்கை கொண்டவர்களே! குரு பார்க்கக் கோடி புண்ணியம் என்பதைப் போல், இவர்களது உயிர் எண்ணாகிய குரு இவர்களுக்கு வரக்கூடியதான கெடுதலகளை விலக்கி விடும்.

**தொழில்**

கூட்டுத்தொழில், கலை சம்பந்தமான தொழில், அழகுச் சாதனங்கள், புத்தகக் கடை, பாத்திரக்கடை இவைகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலை போன்றவைகள் இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு ஏற்றவையே.

**நோய்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு மூட்டுவலி, மாரடைப்பு, மலச்சிக்கல், தலைவலி, வயிற்றுக் கோளாறு போன்றவைகள் வரலாம். இவர்கள் பெயரை நல்லமுறை

(6ம் பக்கம் பார்க்க)

**ஆர். ஐ. துரைமுருகர்**

## தினசரி தியானம்
## வழிபாட்டின் சக்தி

இறைவனுடன் தொடர்புகொள்ளமனிதன் செய்த முயற்சியே வழிபாடு. ஈர்ப்பு விசை அல்லது கவர்ச்சி போல இதுவும் உண்மையானது. வழிபாட்டின் சக்தியை விளக்கிச் சொல்ல முடியாது. நம்பிக்கையும், பக்தியும் கொண்ட உள்ளத்தோடும் மரியாதையுடனும் இதைச் செய்யவேண்டும். உதாரணமாகக் கிருஷ்ணபகவான் திரௌபதியின் துயர் களைய துவாரகைக்குஓடோடிச் சென்றார் கஜேந்திரனின் தீவிரமான பக்தியைஅறிந்து ஹரி தன் சக்கராயுதத்துடன் அவனைக் காக்கும் பொருட்டுச்சென்றார். பிரகலாதனுடையவழிபாடே அவன் மேல் கொதிக்கும் எண்ணெய் ஊற்றப்பட்ட போது குளிர வைத்தது. வழிபாட்டின் போதுநீங்கள்கடவுளுடன் இணைந்து விடுகிறீர்கள்.

சுவாமி சிவானந்தர்

## மீண்டுமோர் யுத்தம்...

யில் இருந்து இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்கா ரணம் கொண்டும் விலகிச் செல்லமுடியாத நிலை எற்பட்டுள் ளது.

சர்வதேசங்களின் இன்றைய நிலைப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் ஒரு யுத்த முனைக்குச் செல்வதற்கு அனுமதிக்காத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் இலங்கை அரசு மீண்டும் ஒரு யுத்தத்தை விடுதலைப் புலிகளுக்கு எதிரா கத் தொடுக்குமானால் மனித வள மேம்பாட்டிற்கு பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டிய சூழ்நிலை ஒன்று கட்டாயம் உருவாகியே தீரும்.

தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள முதற்கட்ட சமாதானப்பேச்சு வார்த்தையின் போது ஆரம்பநிலை அம்சங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இதன் போது சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள அரச பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் தத்தம் கோரிக்கைகளை முன் வைத்து அது தொடர்பான விவாதங்களை நடத்தவுள்ளனர்.

இந்நியைில் இரு தரப்பினருக்கும் இடையில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான உடன்பாடு ஒன்றுக்கு நீண்டகாலம் ஏற்படும் எனவம் மங்கள முனசிங்கா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால, நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் சென்ற பின்னர் இந்தியாவின் நிலைப்பாடு எப்படியிருக்கும் என்று தூதுவரிடம் கேட்டபோது:

இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட விதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக் கைகள் அமைந்திருக்குமானால் இரு சாராருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் ஏற்படவாய்ப்பிருக்கமாட்டாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-த)

---

## ஈ.பி.டி.பி...

ரையாடப்பட்டுள்ளது.

சமாதானத்தை நிரந்தரமாக்கும் வகையில் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளை நிலைநாட்டுவதற்கும் பன்முகத் தன்மை, ஜன நாயகம், சமுகங்களக்கிடையிலான நட்புறவை வளர்த்தெடுத்தல் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டதுடன் இடைக்காலத் தீர்வை மட்டும் சிந்திக்காமல் நிரந்தரத் தீர்வைப் பெறபாடுபட வேண்டும் என்றும் கலந்துரையா டினர்.

அத்துடன் சமாதானத்தை நிரந்தரமாக்கி நிரந்தரத் தீர் வைப் பெறுவதற்கு தமது பங் களிப்புக்கள் செயற்பாடுகள் எவ் விதம் அமைய வேண்டும் என் பது குறித்து மேற்படி கட்சிகள் பொது முடிவுக்கு வந்துள்ளன.

இதேவேளை மேற்படி நான்கு கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

இது இவ்வாறு இருக்க இக் கட்சிகள் நான்கும் இணைந்து பொதுக் கூட்டமைப்பொன்றை உருவாக்கலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

## நல்லூர்...

தவர்களால் கடத்தப்பட்டுள்ளதாகவும் தன்னைக் காப்பாற்றுமாறும் தொலைபேசியில் பெற்றோருக்கு அறிவித்துள்ளார்.

இதனால் பீதியடைந்த பெற்றோர் கொழும்பில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டு மாணவனைக் காப்பாற் றித் தருமாறும் வேண்டினர்.

முன்னதாக மாணவன் கொழும்புக்கு தனியாக பயணம் மேற்கொண்டதில் சந்தேகம் கொண்ட வன்னியில் மாணவனைச சந்தித்த உறவினர் ஒருவர் இது தொடர்பாக பெற்றோருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதனை அடுத்தே மாணவன் கடத்தப்படவில்லை என்றும் தானாகவே கொழும்புக்கு சென்றதாகவும் தெரியவந்துள்ளது. (த-59)

---

## யாழ் மாவட்ட...

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதியில் பளை மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு கூடியளவு நிதியொதுக்கப்பட வேண்டும் என்றும் யுத்தத்தால் அப்பிரதேசங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிசொச்சி அரசாங்க அதிபர் எஸ். விஸ்வலிங்கம் இக்கூட்டத் தில் கோரிக்கை விடுத்தார்.

இவரது இக்கோரிக்கை சபையின் பரிசீலனைக்கு விடப்பட் டது.

திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவுகளையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியுடன் சேர்க்கவேண்டும் என்று திட்டமிடல் பணிப்பாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

அதனை அவ்வாறு செய்ய முடியாது என்றும் நடைமுறைச் செலவீனங்களைக் குறிப்பிட்ட அதிகாரிகள் பொறுப்பேற்கும் வகையில் சம்பளம் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் பதிலளித்தார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய நிதி பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படாமல் துறை சார்ந்த திணைக்களங்களுக்கே வழங்குவது என்று சபையால் தீர்மானிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவா னந்தா, என்.மதனராஜா ஆகியோ ரின் தனித்தனியான 35 லட்ச ரூபாவிற்கான திட்ட முன்மொழிவுகள் சபையால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் வசாவிளான் மத் திய மகாவித்தியாலய புனரமைப்பிற்காக 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, என்.ரவிராஜ் ஆகியோர் தலா ஒரு லட்சம் ரூபாவும் அ.விநாயகமூர்த்தி 50 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

இதேவேளை நேற்றைய கூட்டத்திலும் எம்.பிகள் டக்ளஸ் தேவானந்தா, என்.மதனராஜா, மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. (இ-6-43)

---

## தியாகி...

நினைவு நாள் எழுச்சி நிகழ் [illegible]கள் இன்று ஆரம்பமாகின்றது.

தமிழர்கள் பரந்துவ[illegible]ம் பிரதேசம் எங்கும் உ[illegible] பூர்வமாக அனுஷ்டிக்கப்[illegible] இவ்வெழுச்சி நிகழ்வுகள் [illegible] குடாநாட்டில் உணர்வுபூர்வ[illegible]க அனுஷ்டிக்கப்படுகிறது. (இ)

## ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட்

# சிம்பாவே அணி இந்தியாவிடம் தோல்வி

(யாழ்ப்பாணம்)

ஐ.சி.சி மினி உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று இந்தியாவுக்கும் சிம்பாவேயுக் கும் இடையில் நடந்த போட்டி யில் இந்தியா வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 விக்கெட்டுக் களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முஹம்மது கைப் 111 ஓட்டங்களும் ராகுல் டிராவிட் 71 ஓட்டங்களும் வீரேந்தர் செவான் 48 ஓட்டங்களும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்ரி பிளவர் 145 ஓட்டங்களும் கிராண்ட் பிளவர் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியின் சார்பில் சகீர்கான் 4 வீக்கெட்டுக்களையும் டெணடுல்கர் 2 விக்கெட்டுக்களையும அணில் கும்ளே ஒரு விக்கெட்டையும கைப்பற்றினர். (ந-5)

---

## அரசு- புலி...

களில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் லண்டனில் இருந்து நேற்றுத் தாய்லாந்து போய்ச் சேர்ந்துள்ளனர்.

சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்த நோர்வேக் குழுவினர் தாய்லாந்தில் தங்கியுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச தரப்புப் பிரநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் தாய்லாந்து அரசு அதிஉயர் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ம)

---

## இன்னமும்...

பேச்சுவார்த்தை மேசையில் உடனடியாகத் தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் தோன்றும் போது இரு தரப்பினரும் பொறுமையைக் கடைப் பிடிப்பதே சிறந்தது. இது விடயம் குறித்து இரு தரப்பினருக்கும் வலியுறுத்தவுள்ளோ[illegible] தீர்வு ஒன்றை எட்டுவதற்கு மு[illegible]னர் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியிருக்கும் பேச்சுவார்த்தை மூலம் சமாதா னத்தை எப்பாடுபட்டாவது நிலை நாட்டுவதே அனைவரதும் குறிக்கோளாகும் என்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.


அன்பு வாசகர்களே.

நாளை வலம்புரியின் வாரமலர் சங்கு நாதம் அரசியல், அறிவியல், ஆன்மீகம் அதுவே உங்கள்சங்குநாதம்

நாளை திங்கட்கிழமை



தவறாது கேட்டு வாங்குங்கள்

சமயப் புத்தகங்கள் விற்பனை

கனடா
இந்து சமயப் பேரவை வெளியீடுகள்

தரிசனம் -ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
அர்ச்சனை மாலை -ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் -ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
திருமுறைக்கதைகள் -ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
முத்தான தொண்டர் -கவிஞர் வி. கந்தவனம்
புதிய சைவ வினா விடை (முதலாம் புத்தகம்) -கவிஞர் வி. கந்தவனம்
சிவயோக சுவாமிகளின் அருள் மொழிகள்
பன்னிரு மாத நினைவுகள் -ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
கனடாவிற் சைவ சமயம் -கவிஞர் வி. கந்தவனம்
ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி -பேரறிஞர் முருகவே பரமநாதன்
சைவத் திருமுறைகளின் விழுமியம் -பேரறிஞர் முருகவே பரமநாதன்
புதிய சைவ வினாவிடை (இரண்டாம் புத்தகம்) -கவிஞர் வி. கந்தவனம்

[C/5003]

ஒலியிழை நாடாக்கள்

சமய வாழ்க்கை
சைவத்தின் பெருமை } ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்

சனி.ஞாயிறு கிழமைகளில் பி.ப2மணி - 4.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம்

ஆத்மஜோதி மணி மண்டப நிலையம் ஏழாலை.

மருத்துவ பரிசோதனை
(Medical Check Up)

- நோய் வருமுன் காப்போம் !
- இளவயதில் திடீர் மரணம் !
- நெஞ்சுநோ, நெஞ்சு படபடப்பு, உடல் பருமன், உடல் மெலிவு, இவை இருந்தும் உரிய வைத்திய பரிசோதனையோ, உரிய வைத்திய ஆலோசனையோ பெறாமல் வீணே காலத்தைக் கடத்துவதனால் வீண் இழப்புக்களை சந்திக்க வேண்டியுள்ளது.
- குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர் நோய் உள்ளவராயினும் சரி, நோயற்றவராயினும் சரி இந்தவைத்திய பரிசோதனை (medical check up) செய்வதன் மூலம் தங்கள் உடல் நிலையை அறிந்து கொழுப்புச் சத்துக் கூடிய உணவுகளை தவிர்த்து சுகதேகிகளாக வாழலாம்.
- இரத்த அமுக்கம் நோய் (Blood Presure) சலரோகம் (Diabities) போன்ற நோய் உள்ளவர்கள் இந்த வைத்திய பரிசோதனை மூலம் கூடிய பலனடைவர்.
- வைத்திய பரிசோதனை செய்வதன் மூலம் நோய் ஏதும் கண்டறியப்படின் ஒரு நோயாளியாகி விடுவேன், என்ற பயத்தினால் எம்மிற் பலர் இதைச் செய்வதில்லை. அது தவறு.
- இன்றே எம்மை நாடுங்கள் !
- வைத்திய பரிசோதனை செய்வதன் மூலம், உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
- வைத்திய பரிசோதனையின் பின் இலவச வைத்திய ஆலோசனை.
- வைத்திய பரிசோதனையின் போது நோய்கண்டறியப்படின், மேலதிக சிகிச்சைக்காக உடனே, வைத்திய நிபுணர்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

SAMPANTHAR MODERN HEALTH CARE
NO - 60 ARASADY Rd (Thaddatheru Junction)
Jaffna

[5896]


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.